# அரசாங்க அச்சக் கூட்டுத்தாபன
# வெற்றிடங்கள் – 2026

வர்த்தக அச்சிடல், பாதுகாப்பான அச்சிடல், வெளியீடுகள் மற்றும் காகிதாதிகள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலாபகரமான வர்த்தக அமைப்பான அரச அச்சகக் கூட்டுத்தாபனம் உதவி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) பதவிக்காக நிலவும் வெற்றிடத்திற்கு சிறந்த சாதனைப் பதிவுகளைக் கொண்ட ஆற்றல் மிக்க மற்றும் செயற்றிறனுள்ள இலங்கையரைத் தேடுகின்றது.

## 01. கணக்கியல் அதிகாரி பதவி (JM 1-1) தரம் II (02 பதவிகள்) POST OF ACCOUNT OFFICER

**தொழில் விபரம்:**

- நிதித் திணைக்களத்தின் செயற்பாட்டுப் பணிகளின் ஒட்டுமொத்த மேற்பார்வைக்கு உதவுதல்.
- வருமானம் மற்றும் மொத்தச் செலவைக் கணக்கிடும் (costing) பிரிவுடன் தொடர்புடைய செயற்பாட்டுப் பணிகளை மேற்பார்வை செய்தல்.
- முகாமைத்துவக் கணக்கியல் தொடர்பான அனைத்து தரவுகளையும் சேகரித்தல் மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல்.
- பேரேடுகள் (ledgers) மற்றும் நாளேடுகளின் (journals) பதிவுகளை மேற்பார்வை செய்தல்.
- வருடாந்த சரிபார்ப்பைத் திட்டமிடலும் அதன் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தலும்.
- இறுதி கணக்குகள் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்தல்.

**தகைமைகள்:**

**கல்வி: (வெளிவாரி விண்ணப்பதாரிகள்):**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை மட்டப் பரீட்சை அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) இடைநிலைப் பரீட்சை அல்லது சான்றளிக்கப்பட்ட மற்றும் கூட்டு நிறுவனக் கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடைநிலைப் பரீட்சை அல்லது இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICMASL) இடைநிலைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது முகாமைத்துவம் அல்லது கணக்கியலில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) பெற்றிருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ மொத்தச் செலவைக் கணக்கிடுதல் (Costing)/ கணக்காய்வு துறையில் தகைமைக்குப் பின்னரான ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**(உள்வாரி விண்ணப்பதாரிகள்):**

அ) முகாமைத்துவ உதவியாளர் (MA 1-2) தொழில்நுட்பம் அல்லாத பிரிவின் IIஆம் தரத்தில் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்தவர்கள் இப்பதவிக்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரிகளுக்கு மேலதிகமாக, MA பிரிவில் உள்ளவர்களும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பவர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். அவர்கள் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அண்மைய முன்னைய ஒரு வருட கால திருப்திகரமான சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு

**வயதெல்லை:** வயது 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவுத்திட்டம்:**

2027-01-01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்:
JM 1-1- 2025 ரூ. 72,650/- 10 x 1,360 - 18 x 2,040 – 122,970/- (மாதாந்தம்)
(2026-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 01/2025 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம்)

| கணக்கியல் அதிகாரி - (JM 1-1) | |
|---|---|
| 2026-01-01 | 2027-01-01 |
| ரூபா 65,633.00 | ரூபா 72,650.00 |

## 02. வழங்கல் அதிகாரி பதவி (JM 1-1) தரம் II (01 பதவி) POST OF SUPPLIES OFFICER

**தொழில் விபரம்:**

- வழங்கல்கள் திணைக்களத்தின் செயற்பாட்டுப் பணிகளை மேற்பார்வை செய்தல்.
- அன்றாட செயற்பாடுகள் மற்றும் சேவைகளுக்காக கேள்விப்பத்திரங்களைக் கோருதல் மற்றும் நேரடி விலைமனுக்களைப் பெறுதல்.
- கேள்விப்பத்திரக் கூட்டங்களை அழைத்தல் மற்றும் அவற்றில் பங்குபற்றுதல்.
- கேள்விப்பத்திர ஆவணங்களைத் தயாரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு (TEC) சமர்ப்பித்தல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையுடன் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திர சபைகளுக்கு கோப்புகளைச் சமர்ப்பித்தல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விபரக்குறிப்புகளுக்கு அமைய கொள்வனவுக் கட்டளைகளைத் தயாரித்தல்.

**தகைமைகள்:**

**கல்வி: (வெளிவாரி விண்ணப்பதாரிகள்):**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் அத்துடன் அரசாங்கத் திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னரான ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**(உள்வாரி விண்ணப்பதாரிகள்):**

முகாமைத்துவ உதவியாளர் (MA 1-2) தொழில்நுட்பம் அல்லாத பிரிவின் IIஆம் தரத்தில் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்தவர்கள் இந்தப் பதவிக்கு தகுதியுடையவர்கள் ஆவர்.
மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரிகளுக்கு மேலதிகமாக, MA பிரிவில் உள்ளவர்களும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பவர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். அவர்கள் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அண்மைய முன்னைய ஒரு வருட கால திருப்திகரமான சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு

**வயதெல்லை:** வயது 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவுத்திட்டம்:**

2027-01-01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்:
JM 1-1- 2025 ரூ. 72,650/- 10 x 1,360 - 18 x 2,040 – 122,970/- (மாதாந்தம்)
(2026-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 01/2025 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம்)

| வழங்கல் அதிகாரி - (JM 1-1) | |
|---|---|
| 2026-01-01 | 2027-01-01 |
| ரூபா 65,633.00 | ரூபா 72,650.00 |

## 03. தொழில்நுட்ப உதவியாளர் (ஒப்புநோக்கம்) பதவி (MA 2-2) தரம் III (02 பதவிகள்) POST OF TECHNICAL ASSISTANT (PROOF READING)

**தொழில் விபரம்:**

ஒப்பு நோக்குதல், அச்சிடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட வடிவமைப்புகளின் (layouts) இறுதிச் சரிபார்ப்பை மேற்கொள்ளுதல், இயந்திர பிழை திருத்தப் பிரதிகளை (machine proofs) வாசித்தல் மற்றும் திருத்தப்பட்ட பிழைகளின் மிகச் சரியான திருத்தத்திற்கு பொறுப்பேற்று அச்சிடலைத் தொடர இயந்திர பிழை திருத்தப் பிரதிக்கு அங்கீகாரம் அளித்தல். (விருப்பத்தேர்வு: (அ) சிங்களம் / ஆங்கிலம், (ஆ) தமிழ்/ ஆங்கில மொழி). தாய் மொழியாக தமிழ் பேசக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 04. தொழில்நுட்ப உதவியாளர் மோட்டார் பொறிமுறையாளர் பதவி (MA 2-2) தரம் III (01 பதவி) POST OF TECHNICAL ASSISTANT MOTER MECHANIC

**தொழில் விபரம்:**

- கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படும் அனைத்து டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்களினதும் இயந்திரவியல் திருத்தவேலைகளை மேற்கொள்ளுதல்.
- வெளித் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்ட திருத்தவேலைகள் அல்லது சேவைகள் நிறைவடையும் போது, மேற்கொள்ளப்பட்ட பணிகள் திருப்திகரமாக உள்ளனவா என்பது தொடர்பான சான்றிதழை வழங்குதல்.
- கூட்டுத்தாபன வளாகத்திற்கு வெளியே வாகனம் பழுதடையும் போது, குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் அல்லது வாகனத்தை கூட்டுத்தாபன வளாகத்திற்கு கொண்டு வருதல் அல்லது வெளித் தரப்பினருக்கு பரிந்துரைத்தல்.
- வெளித் தரப்பினருக்கு வாகன திருத்தவேலைகள் அல்லது சேவைப் பணிகள் வழங்கப்படும் போது அவற்றை ஒழுங்காக மேற்பார்வை செய்தல்.

**தகைமைகள்:** (மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப உதவியாளர் (MA 2-2) வகை 03 முதல் 04 வரையிலான பதவிகளுக்கு)

**கல்வி:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தொடர்புடைய துறையில் தேசிய தொழிற்தகைமை 5ஆம் மட்டத்திற்குக் (NVQ Level 5) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல், மற்றும் தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தது ஒரு (01) வருட கால அனுபவம்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தொடர்புடைய துறையில் தேசிய தொழிற்தகைமை 4ஆம் மட்டத்திற்குக் (NVQ Level 4) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல், மற்றும் தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**ஆட்சேர்ப்பு முறை:** செய்முறை தேர்வு (Trade test) மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவுத்திட்டம்:**

2027-01-01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்:
MA 2-2 - 2025 ரூபா. 50,540/- 10 x 540 - 7 x 630 – 4 x 1,080/- 20 x 1,280 – 90,270/- (மாதாந்தம்)
(2026-03-25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 01/2025 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம்)

| தொழில்நுட்ப உதவியாளர் (ஒப்பு நோக்குதல்) - (MA 2-2)<br>தொழில்நுட்ப உதவியாளர் மோட்டார் பொறிமுறை - (MA 2-2) | |
|---|---|
| 2026-01-01 | 2027-01-01 |
| ரூபா 46,960.00 | ரூபா 50,540.00 |

## மேற்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கும் (01 – 04) பொதுவாகப் பின்வருபவை பொருந்தும்:

**சேவை நிபந்தனைகள்:**

மேற்குறிப்பிட்ட பதவிகள் நிரந்தரமானவை மற்றும் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவை.
முன்னைய பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டு உள்வாரியாகத் தெரிவுசெய்யப்படும் ஊழியர்கள் ஒரு (01) வருட பதில் கடமையாற்றும் காலத்திற்கு (acting period) உட்படுத்தப்படுவர்.

**கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக பின்வரும் கொடுப்பனவுகள் இப்பதவிகளுக்கு ஏற்புடையதாகும்.

- சுற்றுநிருபங்களின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
- வரவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு
- உணவுக் கொடுப்பனவு

**ஏனைய மேலதிக சலுகைகள்:**

- ஊழியரையும் அவரது குடும்பத்தினரையும் உள்ளடக்கிய மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- முக்கிய செயல்திறன் குறிகாட்டியை (KPI) அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு முறை.
- EPF மற்றும் ETF.
- பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான பணக்கொடுப்பனவு

**விண்ணப்பிக்கும் முறை:**

- 2026-09-04ஆம் திகதியில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் தமது தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், தொழில் அனுபவம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரசாங்கம்/ பொது நிறுவனங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ சபைகளில் சேவையாற்றுபவர்கள், தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களும் ''தலைவர், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க" என்ற முகவரிக்கு 2026-09-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் நேரடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

**தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

- இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதேனும் இருப்பின், ஆட்சேர்ப்பு தொடர்பான தகுதி வாய்ந்த அதிகாரியே அது தொடர்பில் முடிவெடுப்பார். எந்தவொரு வகையிலான செல்வாக்கு செலுத்துதலும் தகைமையீனமாகக் கருதப்படும்.

**தலைவர்,**
**அரச அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ, பாதுக்க.**

SPC